பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
13 03 2025 **THURSDAY** 12 40 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மொரீசியஸ் நாட்டில் தமக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்புக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்..
- மக்களவையில் எண்ணெய் வயல்கள் சட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பது எரிசக்தி துறையில் இந்தியாவை சுயசார்பு அடையச் செய்யும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.
- ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், கிராமப்புறங்களில் உள்ள 12 கோடியே 28 லட்சம் வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- சென்னையில் சுமார் 5 கோடி ரூபாய் செலவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மாநில அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் இன்று தொடங்கி வைத்தார்.
- ஆஸ்திரேலிய ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இன்று நடைபெறவுள்ள காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் - ஸ்காட்லாந்தின் **Greg Lobban**-ஐ எதிர்கொள்கிறார்.

>>>>>><<<<<<

மொரீசியஸ் நாட்டில் தமக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்புக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டு அரசுக்கும் பிரதமர் பிரதமர் திரு. நவீன் சந்திர ராம்கூலம்-த்திற்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

தமது இரண்டாவது நாள் மொரீசியஸ் பயணம் குறித்த காணொலியை சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், பெருந்திரளமாக திரண்டு வந்து தம்மை வரவேற்ற மொரீசியஸ் மக்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தமது மொரீசியஸ் பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் புறப்பட்ட திரு. நரேந்திர மோடியை அந்நாட்டு பிரதமர் திரு. நவீன் சந்திர ராம்கூலம் விமான நிலையம் வரை வந்து வழியனுப்பி வைத்தார்.

>>>>>><<<<<<

மக்களவையில் எண்ணெய் வயல்கள் சட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பது எரிசக்தி துறையில் இந்தியாவை சுயசார்பு அடையச் செய்வது என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உத்தரவாதத்திற்கு கிடைத்த வெற்றி என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பதன் மூலம், இந்தியாவின் எரிசக்தி துறையில் அதிக முதலீடுகளை ஈர்ப்பதுடன், தொழில் தொடங்குவதை எளிதாக்கும் நடவடிக்கையை ஊக்குவிக்கவும் வகை செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து வகையான ஹைட்ரோ கார்பன்கள் குத்தகை விவகாரத்தில் மாநிலங்களின் உரிமைகளை நிலைநாட்டவும் இந்த சட்டதிருத்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், இம்மாதம் 9ஆம் தேதிவரை நாடுமுழுவதும், கிராமப்புறங்களில் உள்ள 12 கோடியே 28 லட்சம் வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுவரை 15 கோடியே 51 லட்சத்திற்கும் அதிகமான வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் ஜல் சக்தி அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த இயக்கம், வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதன் காரணமாக, குடிநீருக்காக பெண்கள், தொலைதூரம் சென்று வரும் நிலை மாறியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

**IIT, NIT** உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்கான **JEE** நுழைவுத் தேர்வுக்கு பயிற்சி அளிக்கும் பிரபல தனியார் நிறுவனம் மீது தில்லி காவல்துறையினர் மோசடி வழக்கு பதிவு செய்துள்ளனர்.

கிழக்கு தில்லியின் ப்ரீத் விஹார் பகுதியில் செயல்பட்டு வரும் இந்த நிறுவனத்தின் கிளையில் பயின்ற மாணவர்கள் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் தில்லி காவல்துறையின் பொருளாதார குற்றப்பிரிவினர் மோசடி, குற்றச்சதி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

உத்தரபிரதேசத்தின் காஸியாபாத், நொய்டா மற்றும் மத்தியப்பிரதேசத்தின் போபால் ஆகிய இடங்களிலும் இந்த நிறுவனத்திற்கு எதிராக முறைகேடு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

ஜி.20 அமைப்பின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கான நடவடிக்கை குழுவின் முதலாவது கூட்டத்தை தென்னாப்பிரிக்கா வரும் 18ஆம் தேதி முதல் 20ஆம் தேதிவரை நடத்தவுள்ளது.

காணொலி வாயிலாக நடைபெறும் இக்கூட்டத்தில் ஐரோப்பிய மற்றும் ஆப்பிரிக்க யூனியன் உள்ளிட்ட உறுப்பு நாடுகளைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் பங்கேற்கவுள்ளதாக தென்னாப்பிரிக்க வர்த்தக தொழில்துறையின் துணைத் தலைமை இயக்குநர் திரு. **Mlumbi Peter** தெரிவித்துள்ளார்.

இந்த குழு மொத்தம் 4 கூட்டங்களை நடத்தவிருப்பதாகவும், வரும் அக்டோபர் மாதத்தில் நடைபெறும் கடைசி கூட்டத்தில் ஜி.20 நாடுகளைச் சேர்ந்த வர்த்தக அமைச்சர்கள் பங்கேற்கவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

சென்னையில் சைதாப்பேட்டை சட்டப்பேரவை தொகுதியில் சுமார் 5 கோடி ரூபாய் செலவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மாநில அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் இன்று தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தப் பணிகள் செயல்பாட்டிற்கு வரும்போது, இப்பகுதியில் மழைநீர் தேங்காத நிலை ஏற்படும் என்றார்.

(சவுண்ட் பைட் – மா. சு 35 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தூத்துக்குடி வ.உ.சி துறைமுகம் நடப்பு நிதியாண்டில் இதுவரை 7 லட்சத்து 47 ஆயிரத்து 363 சரக்கு பெட்டகங்களை கையாண்டு சாதனை படைத்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 7 புள்ளி ஐந்து இரண்டு சதவீதம் அதிகம் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – லெட்சுமணன் 50 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இந்திய கடற்படையில் உள்ள வேலைவாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலான கார் பயணம், சென்னையில் இன்று தொடங்கியது.

சென்னை, ஐ.என்.எஸ். கடற்படை தளத்திலிருந்து புறப்பட்ட இந்தப் பயணத்தை தமிழகம், புதுச்சேரி, கடற்படை பொறுப்பு அதிகாரி ரியர் அட்மிரல் சதிஷ் ஷெனாய் தொடங்கி வைத்தார்.

கடற்படையைச் சேர்ந்த 30 அதிகாரிகள் மற்றும் மாலுமிகள் இந்தப் பயணத்தில் பங்கேற்றுள்ளனர்.

புதுச்சேரி, நாகப்பட்டினம், ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட கடலோர பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இந்தப் பயணத்தின் போது, நாட்டின் கடலோரப் பகுதிகளை பாதுகாப்பதில் கடற்படையின் பங்கு மற்றும் பேரிடர் காலத்தில் மேற்கொண்டு வரும் மனிதநேய உதவிகள் குறித்தும் எடுத்துரைக்கப்படவுள்ளது.

>>>>>><<<<<<

மத்தியப்பிரதேசத்தின் **Badnawar** பகுதியில் நேற்றிரவு நிகழ்ந்த சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 3 பேர் படுகாயமடைந்தனர்.

உஜ்ஜைனி நோக்கி சென்று கொண்டிருந்த டிரக் எதிர் திசையில் சென்ற போது, அந்த சாலையில் வந்து கொண்டிருந்த இரண்டு வாகனங்கள் மீது மோதியதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட விண்வெளி வீரர்களை பூமிக்கு திரும்ப அழைத்து வருவதற்கான ராக்கெட்டை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

நாசாவின் கென்னடி ஏவுதளத்திலிருந்து **Falcon-9** ராக்கெட் இன்று செலுத்தப்படவிருந்த நிலையில், ராக்கெட்டில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பாகிஸ்தானில் இந்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் மத ரீதியாக துன்புறுத்தப்படுவதை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

வாஷிங்டனில் செய்தியாளர்களை சந்தித்த அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ராஜா கிருஷ்ணமூர்த்தி, திரு. சுஹாஸ் சுப்பிரமணியம் ஆகியோர், பாகிஸ்தானில் உள்ள இந்து, சீக்கிய மற்றும் கிறிஸ்தவ மதங்களை சேர்ந்த சிறுமிகளை கட்டாய மதமாற்றம் செய்வதை தடுக்க அந்நாட்டு அரசு சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அமெரிக்க அரசும் தூதரக ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலிய ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இன்று நடைபெறவுள்ள காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் - ஸ்காட்லாந்தின் **Greg Lobban**-ஐ எதிர்கொள்கிறார்.

>>>>>><<<<<<

ஆல் இங்கிலாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியா விளையாடவுள்ளது.

பர்மிங்காமில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியாவின் ரங்கி ரெட்டி - ஷிராக் செட்டி இணை, சீனாவின் **Hao Nan Xie – Wei Han Zeng** இணையை எதிர்கொள்கிறது.

**>>>>>><<<<<<**

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள எலிமினேட்டர் சுற்றில் மும்பை அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**>>>>>><<<<<<**